


தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

dhinatamil.tn@gmail.com • மாற்றத்தின் ஆரம்பம் • www.dhinatamil.com dhinatamil
.நாகர்கோவில் பதிப்பு . 09.01.2026 . மலர் 04 . இதழ் 009. வெள்ளிக்கிழமை dhinatamil . NAGERCOIL EDITION . 09.01.2026 . VOL 04 . ISSUE 009. FRIDAY . 4 PAGES . Rs. 5


## டெல்லியில் எடப்பாடியை அதிரவிட்ட அமித்ஷா

# 80 சீட் : 3 அமைச்சர் பதவி

புதுடெல்லி, ஜன.09-

சட்டசபை தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு 80 சீட் மற்றும் தேர்தலுக்கு பின் 3 அமைச்சர் பதவி தரவேண்டும் என்று எடப்பாடி பழனிசாமியை அதிர வைத்துள்ளார் அமித்ஷா.

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் தங்கள் கூட்டணியில் இருந்த கட்சிகள் அனைத்தையும் மீண்டும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து திமுக கூட்டணியை வீழ்த்த வேண்டும் என நினைக்கும் பாஜக, அதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. ஆனால் தனக்கிருக்கும் சில சங்கடங்கள் காரணமாக, அதற்கு பிடி கொடுக்காமல் நழுவிக் கொண்டே இருக்கிறார் பழனிசாமி. இதனால், பலமான அதிமுக - பாஜக கூட்டணியை கட்டமைப்பது இன்னும் இழுத்துக் கொண்டே போகிறது.



இம்முறை அமித் ஷா தமிழக வரும்போது என்டிஏ கூட்டணியில் இருக்கும் சிக்கல்களுக்கு எல்லாம் தீர்வு கண்டுவிடுவார். அதற்கு முன்னோட்டமாக அவரது புதுக்கோட்டை நிகழ்ச்சியில் அதிமுக உள்ளிட்ட என்டிஏ கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கெடுப்பார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்ட நிலையில், அனைத்தும் புஸ்வாணம் ஆகிப் போனது. இதற்குக் காரணம், அதிமுக-வின் ‘பெரியண்ணன்’ போக்கு தான் என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.

தினகரன், ஓபிஎஸ் உள்ளிட்டவர்களை கூட்டணியில் இணைப்பது குறித்து இறுதி முடிவை எடுத்துவிட வேண்டும் என்ற அஜெண்டாவுடன் தான் அமித் ஷா தமிழகம் வந்தார். தாங்கள் கேட்கும் 80 தொகுதிகளை அதிமுக தங்களிடம் தந்துவிட வேண்டும். அதிலிருந்து கூட்டணி கட்சிகளுக்கு தாங்களே தொகுதிகளைப் பங்கிட்டுக் கொடுப்பது என்பது தான் பாஜக-வின் திட்டம். அதாவது, தினகரன், ஓபிஎஸ், பாமக, தேமுதிக உடனான பஞ்சாயத்துகளை நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என்பது தான் அதிமுக-வுக்கு பாஜக அனுப்பிய செய்தி. இதுபற்றி அந்தக் கட்சிகளிடமும் பாஜக தரப்பில் பேசி தாஜா செய்து வைத்ததால் தான் அவர்களும் தங்கள் முடிவை அறிவிக்காமல் இழுத்தார்கள்.

இந்தக் கட்சிகளுக்கும் சேர்த்தே தான் 80 தொகுதிகளை அதிமுக-விடம் கேட்கிறது பாஜக. ஆனால், இப்படியெல்லாம் டீல் பேசி முடித்தால் பாஜக தான் கூட்டணியையே கட்டமைத்தது போன்ற தோற்றம் உருவாகிவிடும். மற்ற கட்சிகளுக்கு பாஜக தான் தொகுதிகளைப் பகிர்ந்தளிக்கும் என்றால், நாளைக்கு எந்த முடிவாக இருந்தாலும் பாஜக சொல்வதைத்தான் அந்தக் கட்சிகள் கேட்கும் என்பதால் இந்த செயல்திட்டத்துக்கு அதிமுக ஒத்துவரவில்லை என்கிறார்கள்.

அதனால் தான் முன்னேற்பாடாகவே அதிமுக பொதுக்குழுவில் ‘கூட்டணிக்கு தலைமை அதிமுக தான். எந்தெந்த கட்சிகளை கூட்டணியில் சேர்க்கலாம் என்பதை அதிமுக பொதுச்செயலாளர் தான் முடிவு செய்வார்’ என்று தீர்மானம் நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில், மீண்டும் இதே ரீதியிலான பேச்சுவார்த்தைகளை வளரவிட வேண்டாம் என்பதற்காகவே அமித் ஷாவை சந்தித்துப் பேச எஸ்.பி.வேலுமணியை மட்டும் அனுப்பிவிட்டு சேலத்துக்குப் போய்விட்டார் பழனிசாமி.

### முற்றும் நெருக்கடி - ஆட்டம் காண்கிறதா கூட்டணி?!

பழனிசாமி எதிர்பார்த்தது போலவே, தினகரன், ஓபிஎஸ் பஞ்சாயத்துகளையே தன்னை சந்தித்த வேலுமணியிடம் அமித் ஷா பிரதானமாகப் பேசியதாகச் சொல்கிறார்கள். அவருடனான பேச்சுவார்த்தை விவரங்களை பழனிசாமிக்கு உடனடியாகவே தெரிவித்திருக்கிறார் வேலுமணி. ஆனால், அமித் ஷா சொன்ன சில நிபந்தனைகளுக்கு பழனிசாமி சம்மதிக்கவில்லை என்று தெரிகிறது. குறிப்பாக 80 சீட் என்பது பா.ஜ.க.வுக்கு ஓவர், அதெல்லாம் தர முடியாது என கறார் காட்டி உள்ளார் எடப்பாடி பழனிசாமி. இந்தத் தகவலை மீண்டும் அமித் ஷாவை சந்தித்து விளக்கினார் வேலுமணி. இப்படி இழுத்துக் கொண்டே போனதால், எந்த முடிவுக்கும் வரமுடியாமல் அப்செட் ஆன அமித் ஷா, திருச்சியில் பொங்கல் விழாவை முடித்துவிட்டு பொலிடிக்கல் மூவ் எதையும் முடிக்க முடியாமலேயே டெல்லி கிளம்பிவிட்டார்.

அதேசமயம், இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஒரு பக்கம் போய்க்கொண்டிருந்த நிலையில், புதுக்கோட்டை நிகழ்ச்சியில் பேசிய அமித் ஷா, “தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமையும்” என்று மீண்டும் அழுத்தினார். அதே நாளில் சேலத்தில் பேசிய பழனிசாமியும், “அதிமுக தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்” என்று அமித் ஷாவுக்கு பதில் சொல்வது போல் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

இரண்டு கட்சிகளும் இப்படி காட்டுக்கும் மேட்டுக்குமாக இழுத்துக் கொண்டே இருப்பதால் அதிமுக கூட்டணி இன்னும் இறுதி வடிவத்தை எட்டமுடியாமல் ஊசலாட்டத்தில் இருக்கிறது. அமித் ஷாவை நம்பி தங்களது முடிவுகளை ஒத்தி வைத்திருந்த கட்சிகளும் இனியும் தாமதித்தால் தங்களுக்கு சிக்கலாகிவிடும் என்பதால் தங்களுக்கான பாதைகளைத் தேடி புறப்பட்டுவிட்டன. அப்படித்தான் அன்புமணி தலைமையிலான பாமக , தன்னிச்சையாக முடிவெடுத்து அதிமுக-வுடன் கைகோர்த்து விட்டது. இந்த நிலையில், அமித் ஷாவை டெல்லியில் சந்தித்து பேசினார் எடப்பாடி பழனிசாமி. இரவு அமித்ஷாவை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக சந்தித்து பேசினார்.அப்போது, எடப்பாடி பழனிசாமியிடம் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கறாராக பேசியதாக கூறப்படுகிறது. அதாவது, பாஜகவுக்கு குறைந்தது 56 தொகுதிகள் வேண்டும் என்றும், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் 3 அமைச்சர் பதவிகளும் பாஜகவுக்கு வேண்டும் என்று கூறியதாக பரபரப்பு தகவல்கள் டெல்லியில் இருந்து வெளியாகியுள்ளன.தமிழக அரசியலை பொறுத்தவரை திமுகவும், அதிமுகவும் ஆட்சி அமைக்கும் போதெல்லாம் ஆட்சி அதிகாரத்தில் கூட்டணி கட்சிகளுக்கு இடம் வழங்கியதில்லை. இப்போது, திமுக கூட்டணியிலும் காங்கிரஸ் கட்சி, ஆட்சியில் பங்கு கேட்டுவருகிறது. அதே போல், அதிமுக கூட்டணியிலும் பாஜக, ஆட்சியில் பங்கு கேட்பது அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்தத்தில் தேசிய கட்சிகள் இரண்டும் தமிழகத்தில் கால் ஊன்ற தீவிரமாக செயல்படுவதையே இதுபோன்ற நகர்வுகள் காட்டுகின்றன. அதிக சீட் கேட்டு பாரதிய ஜனதா நெருக்கடி கொடுத்தால் அந்தக்கூட்டணியே வேண்டாம் என்ற முடிவுக்கு வருவாரா எடப்பாடி பழனிசாமி? அல்லது வழக்கம் போல வழக்குகளுக்கு பயந்து சப்பைக்கட்டுடன் பாரதிய ஜனதாவை தூக்கி சுமப்பாரா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.



சங்கரன்கோவில் பாரதியார் 8ம் தெரு பகுதியில் வாறுகால் அமைக்கும் பணி மற்றும் பல்வேறு பணிகளுக்காக பூமி பூஜை போடுவதற்கு வருகை தந்த தென்காசி வடக்கு திமுக மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ, நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ் ஆகியோருக்கு சீனிவாசன் ஜீவல்லரி தொழிலதிபர் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் சால்வை அணிவித்து வரவேற்பளித்தனர் எம்எல்ஏ உடன் வருகை தந்த அனைவரையும் வரவேற்றனர். நிகழ்ச்சியில் நகராட்சி பொறியாளர் இர்வின் ஜெயராஜ்,நகரசெயலாளர் மு.பிரகாஷ் மாணவரணி வெங்கடேஷ், மற்றும், துணைப் பொறியாளர், கவுன்சிலர்கள் ராஜா ஆறுமுகம், செல்வராஜ், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தள்ளிப்போன ஜனநாயன் ரிலீஸ் விஜய்க்கு முட்டுக்கொடுத்த காங்கிரஸ்!

சென்னை, ஜன.09-

சென்சார் பிரச்னையால் நடிகரும், தவெக தலைவருமான விஜய் நடித்த ஜனநாயகன் படத்துக்கு சென்சார் தணிக்கை சான்றிதழ் வழங்காததால் அந்தப்படம் நாளை (10ந்தேதி) வெளியாகவில்லை. இந்தச்சூழ்நிலையில் ஏற்கனவே தவெக கூட்டணிக்காக துண்டு விரித்துள்ள காங்கிரஸ், ஜனநாயகன் ரிலீஸ் செய்ய முடியாததற்கு மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா அரசுதான் காரணம் என முட்டுக்கொடுக்கத் தொடங்கி உள்ளது.

## வட மாநிலங்களில் கிறிஸ்துமஸ் அலங்காரங்கள் தீ வைத்து எரிப்பு இறையாண்மை காத்திட வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்டு மா.லெ ஆர்ப்பாட்டம்



நாகர்கோவில், ஜன.9-

கன்னியாகுமரி மாவட்டம், இந்திய கம்யூனிஸ்டு மார்க்சிஸ்ட் லெனின்ஸ்டு கட்சி சார்பில் மாலை நேர கண்டன ஆர்ப்பாட்டம் நாகர்கோவில் செம்மாங்குடி ரோட்டில் நடைபெற்றது. இந்தியாவில் வடமாநிலங்களில் கடந்த கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில் கிறிஸ்தவர்கள் அமைத்திருந்த கிறிஸ்துமஸ் குடில்கள், அலங்காரங்கள் மற்றும் கிறிஸ்துமஸ் தாத்தா உருவங்களை அடித்து உடைத்து தீயிட்டு கொளுத்தி வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்ட மதவெறி கும்பல்கள் மீது நடவடிக்கை எடுத்து இந்திய இறையாண்மையை பாதுகாக்க வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் ஐயப்பன் ஒன்றிய அரசை கண்டித்து உரை ஆற்றினார். அகில இந்திய பெண்கள் விடுதலை கழகம் மாவட்டத் தலைவர் சியாமளா தலைமை தாங்கினார். நிர்வாகிகள் ராஜன், சுரேஷ், சுதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசை கண்டித்து கண்டன கோஷம் எழுப்பப்பட்டது.

## அதங்கோட்டில் எஸ்.பி ஸ்டாலின் ஆய்வு



களியக்காவிளை, ஜன.9 -

களியக்காவிளை அருகே அதங்கோட்டில் மாவட்ட எஸ்.பி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

தமிழக - கேரளா எல்லை பகுதியான செங்கவிளை, குளப்புறம், அதங்கோடு மடிச்சல், படத்தாலுமூடு வழியாக கனிம வளம் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட நேரம் தவிர்த்து எப்போதும் காலி டாரஸ் லாரிகள் வந்த வண்ணம் உள்ளது. இது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி உள்ளது. ஆகவே இதனை தடுக்க அப்பகுதி பொதுமக்கள் மாவட்ட எஸ்.பி ஸ்டாலினுக்கு புகார் மனு அனுப்பியுள்ளனர். ஆகவே மாவட்ட எஸ்.பி ஸ்டாலின் அதங்கோடு பை - பாஸ் ரோட்டை ஆய்வு செய்தார். அத்துடன் காலி டாரஸ் லாரிகள் வராமல் தடுக்கும் பொருட்டு இரும்பு கம்பிகள் மூலம் தடுப்பு ஏற்படுத்தியுள்ளார். ஆகவே அனுமதிக்கப்பட்ட நேரங்களில் மட்டும் டாரஸ் லாரிகள் அனுமதிக்கப்படுகிறது.

## அன்புவனத்திற்கு கோவை பாரதியார் பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குனர் வருகை !.



நாகர்கோவில், ஜன.09-

கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக தொலைதூர கல்வியாக இயக்குனர் டாக்டர் பி செல்ல சுவாமி அய்யா வைகுண்டர் அன்புவனத்திற்கு வருகை தந்து குரு மகா சன்னிதானம் பால பிரஜாபதி அடிகளாரை சந்தித்து அய்யா வைகுண்டர் வழிபாடு மற்றும் அய்யாவின் போதனைகளை கேட்டு அறிந்தார். அவரை அன்புவனம் நிர்வாகி பேராசிரியர் ஆர் தர்மரஜினி வரவேற்றார்.

### திற்பரப்பில் பீதியைக் கிளப்பும் முதலைகள்

## மக்களே, ஆற்றில் இறங்காதீங்க கடுமையாக எச்சரித்த எம்.எல்.ஏ.!



நாகர்கோவில், ஜன.09-

திற்பரப்பில் பீதியைக் கிளப்பும் முதலைகளால் மக்கள் ஆற்றில் இறங்க வேண்டாம் என எம்.எல்.ஏ தாரகை கத்பர்ட் எச்சரித்தார் ஆற்றில் எத்தனை முதலை உள்ளன என்பதை உறுதி செய்ய வனத்துறை தெர்மல் இமேஜ் எடுக்க முடிவு செய்துள்ளது. அதற்காக ட்ரோன் கேமரா மூலமாக படம் எடுக்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது என்றார் விளவங்கோடு எம்.எல்.ஏ தாரகை கத்பர்ட்.

இயற்கை எழில் சூழ்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள சுற்றுலா தலங்களில் ஒன்று திற்பரப்பு அருவி. ஆண்டின் அனைத்து நாள்களிலும் தண்ணீர் கொட்டும் என்பதால் தமிழகம், கேரளா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். பேச்சிப்பாறை அணையில் இருந்து வெளியேறும் உபரி தண்ணீர் கோதையாறு வழியாகப் பாய்ந்து வரும் வழியில், திற்பரப்பு பகுதியில் அருவியாகப் பாய்கிறது. திற்பரப்பு அருகே உள்ள தோட்டவாரம் பகுதிக்கும் செங்குழிக்கரை-க்கும் இடையே ஓடும் கோதையாற்றின் உள்பகுதியிலுள்ள தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஆற்றில் அமைந்திருக்கும் அந்தக் குடிநீர்த் தொட்டியின் மேற்பகுதியில் முதலை ஒன்று ஓய்வெடுத்துக்கொண்டிருப்பதை சில நாள்களுக்கு முன் அப்பகுதி மக்கள் பார்த்துள்ளனர். இது குறித்து வனத்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும், முதலை நடமாட்டம் குறித்து உறுதி செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. இதற்கிடையே தொழிலாளி ஒருவர் அதிகாலையில் ரப்பர் பால் வெட்டுவதற்காகச் சென்ற சமயத்தில் ஆற்றில் உள்ள தண்ணீர்த் தொட்டிக்கு மேல் படுத்திருந்த முதலையை பார்த்து செல்போனில் போட்டோ எடுத்தார். அதைத் தொடர்ந்து முதலை நடமாட்டம் உறுதிசெய்யப்பட்டது. அதன் பின்னர் நேற்றும் அதற்கு முந்தைய தினமும் பலமுறை மக்கள் முதலையை நேரில் பார்த்துள்ளனர். இதனால் அப்பகுதி மக்களுக்கு அச்சம் தொற்றிக் கொண்டது.

மக்கள் குளிப்பது உள்ளிட்ட தேவைகளுக்கும் அதிகமாகப் பயன்படுத்தும் ஆற்றில் முதலை நடமாட்டம் உறுதிசெய்த பின்பும், முதலையைப் பிடிக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஏற்பட்டதால், மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வந்தது. இதைத் தொடர்ந்து விளவங்கோடு தொகுதி எம்.எல்.ஏ தாரகை கத்பர்ட் திற்பரப்பு பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். மேலும், களியல் பகுதி வனத்துறை ரேஞ்சர் முகைதீன் அப்துல்காதர் தலைமையில் வனத்துறையினர் அப்பகுதிக்குச் சென்று ஆய்வு செய்தனர். வனத்துறை சார்பில் எடுக்கப்படும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள், முதலையை அப்புறப்படுத்த மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்து எம்.எல்.ஏ கேட்டறிந்தார்.

பின்னர் தாரகை கத்பர்ட் எம்.எல்.ஏ கூறுகையில், "முதலை நடமாட்டம் உள்ள ஆற்று பகுதியில் மக்கள் சில நாள்களுக்கு இறங்காமல் இருக்கவேண்டும். முதலையைப் பிடித்து அப்புறப்படுத்த வனத்துறை சார்பில் முதற்கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. தற்போது ஆற்றில் எத்தனை முதலைகள் உள்ளன என்பதை உறுதி செய்ய வனத்துறை தெர்மல் இமேஜ் எடுக்க முடிவு செய்துள்ளது. அதற்காக ட்ரோன் கேமரா மூலமாக படம் எடுக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளது. கணக்கெடுக்க வசதியாக ஆற்றோரம் உள்ள புதர்கள் அகற்றப்படும்.

எத்தனை முதலைகள் ஆற்றில் உள்ளன என்பதை உறுதிசெய்துவிட்டால், அதை பிடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒருசில நாள்களில் இந்தப் பணிகள் முழுமைபெறும். மக்களின் பாதுகாப்பு சார்ந்த விஷயம் என்பதால் இந்தப் பணிகளை நான் தொடர்ந்து கண்காணிக்க முடிவு செய்துள்ளேன். மக்கள் அச்சப்பட தேவையில்லை. ஆனால், முதலைகளைப் பிடித்து அப்புறப்படுத்தும் வரை குறிப்பிட்ட பகுதியில் ஆற்றில் இறங்க வேண்டாம்" என்றார்.

# கலைஞர் கைவினை திட்டம் மண்டல அளவிலான நல திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்



திண்டுக்கல், ஜன.09-

திண்டுக்கல்லில் கலைஞர் கைவினை திட்டம் மண்டல அளவிலான நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திண்டுக்கல் மாவட்டம், வேலுநாச்சியார் வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலைஞர் கைவினைத் திட்டத்தில் மண்டல அளவிலான நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் நிகழ்வில் தூத்துக்குடி, தேனி, சிவகங்கை, தென்காசி, கன்னியாகுமரி, மதுரை, திருநெல்வேலி, திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகர் போன்ற பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த கைவினைக் கலைஞர்களுக்கு பூட்டு தயாரித்தல், பாரம்பரிய இசை கருவிகள் தயாரித்தல், பாசிமணி வேலைப்பாடுகள், கூடை முடைதல், கயிறு, பாய் பின்னுதல் போன்ற பல்வேறு கைவினை தொழில்களை மேற்கொள்ள மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரிய சாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.ஆர் ராமச்சந்திரன் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.சச்சிதானந்தம், ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பே.செந்தில்குமார், காந்தி ராஜன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல் ஆனந்த், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி திருச்செந்தூர் வட்டம் அம்மன்புரம் ஊராட்சி நியாய விலைக் கடையில் நடைபெற்ற விழாவில் மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் அரசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ அரிசி ஒரு கிலோ சர்க்கரை ஒரு முழுக்கரும்பு ஆகிய பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3000/– ம் ரொக்கம் மற்றும் வேட்டி சேலை வழங்கினார். வருவாய் கோட்டாட்சியர் திருச்செந்தூர் ஆர்.கௌதம் , கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜேஷ் ஆகியோர் உள்ளனர்.

# குமரியில் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3000 வழங்கல் அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார் !



நாகர்கோவில், ஜன.9 –

தமிழர் விழாவாம் பொங்கல் திருநாளை அனைத்து தரப்பட்ட மக்களும் மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3000 வழங்கும் திட்டத்தினை சென்னையில் தமிழக முதல்வர் நேற்று துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து குமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில் அமைச்சர் மனோதங்கராஜ் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட முகிலன்விளை நியாயவிலைக்கடையில் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3000யினை குடும்ப அட்டைத்தாரர்களுக்கு வழங்கினார். தொடர்ந்து அவர் பேசுகையில்:–

தமிழக முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் சமத்துவ பொங்கல் என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தி, ஒரே பந்தியில் அனைத்து தரப்பட்ட மக்களும் அமர்ந்து சாப்பிட வைத்து, இத்திட்டத்தினை செயல்படுத்தினார்கள். நம்முடைய வளர்ச்சி என்பது ஒற்றுமையில் தான் இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களும் பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்று பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். என கூறினார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு உணவு ஆணையத்தலைவர் சுரேஷ் ராஜன், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் ராஜேஷ்குமார், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# நாகர்கோவிலில் கனிமொழி எம்.பி., பிறந்தநாள் பிரபா ஜி ராமகிருஷ்ணன் நல உதவிகள் வழங்கினார்



சுசீந்திரம்.ஜன.9–

பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி பிறந்த நாளை முன்னிட்டு விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் முன்னாள்இந்து அறநிலைத்துறை அறங்காவல் குழு தலைவர்பிரபா ஜி ராமகிருஷ்ணன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

மண்டல தேர்தல் பொறுப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கவிஞர் கனிமொழி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் புத்தேரி பாலம் அருகே ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள், இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், குமரி மாவட்ட முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் பிரபா ஜி ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

விளையாட்டு மேம்பாட்டு அணி மாநகர கிழக்கு பகுதி அமைப்பாளர் சர்ச்சில் மார்டின் முன்னிலை வகித்தார். தோவாளை வடக்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அமைப்பாளர் பாக்கியமணி, மாவட்ட தொழிற்சங்க தலைவர் ஜலீல், வடசேரி லிறிதி தலைவர் தர்மர், வட்ட பொறுப்பாளர் பாலாசிங், ஆதி திராவிட துணை அமைப்பாளர் ஆஸ்டின், விளையாட்டு மேம்பாட்டு அணி தோவாளை வடக்கு ஒன்றிய துணை அமைப்பாளர் சனு, கழக உறுப்பினர்கள் முத்து செல்வி, ஜான், கிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# விளாத்திகுளம் பள்ளியில் 9 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த கட்டுமான தொழிலாளி போக்சோவில் கைது !



விளாத்திகுளம், ஜனவரி. 09-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அதே பகுதியைச் சேர்ந்த 9 வயது சிறுமி ஒருவர் 4 வகுப்பு பயின்று வருகிறார். இந்நிலையில் இயற்கை உபாதை கழிப்பதற்காக பள்ளியின் கழிவறைக்கு அச்சிறுமி செல்லும் போது, பள்ளி வளாகத்தில் கட்டுமான பணியில் ஈடுபட்டு வந்த காடல்குடி கிராமத்தைச் சேர்ந்த கருப்பசாமி என்பவரது மகன் கருமுருகன்(25), சிறுமியின் கையைப்பிடித்து இழுத்து பாலியல் சீண்டலில் ஈடுபட்டதோடு, செல்போனானில் ஆபாச புகைப்படங்களை காட்டி அத்துமீறியுள்ளான். பின் அங்கிருந்து தப்பி ஓடி வந்த சிறுமி இதுபற்றி பள்ளி தலைமை ஆசிரியையிடம் கூறியுள்ளார். இதைத்தொடர்ந்து பள்ளியின் தலைமை ஆசிரியை, பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் மற்றும் விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு தகவல் அளித்ததன்பேரில், போலீசார் கட்டுமான தொழிலாளியான கருமுருகனை போக்சோவில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# படந்தாலுமூட்டில் அகத்தியர் ஜெயந்தி விழா




களியக்காவிளை, ஜன. 9 –

படந்தாலுமூடு சிவராமன் ஆசான் மெம்மோரியல் சித்த வர்ம குருகுலம் மற்றும் அனுக்கிஹா சித்த வர்ம வைத்தியசாலையும் இணைந்து அகஸ்தியர் ஜெயந்தி விழா நடத்தப்பட்டது. விழாவில் டாக்டர் சுரேஷ் குமார் தலைமை வகித்தார். களியக்காவிளை பேரூராட்சி தலைவர் சுரேஷ் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். பிரின்ஸ் வைத்தியர் வரவேற்றார். ரிச்சார்டு ஸ்டேண்டோ குருக்கள், வாசுதேவன் வைத்தியர், சுவாமி ராஜ வைத்தியர் மோகன்லால், பிறேமா மோகன் ராஜ் , குருகுல ரட்சாதிகாரி டாக்டர் விஜயன், பெங்களூர் பகுதியை சார்ந்த நாராயணன், ராஜஸ்தானில் இருந்து வருகை தந்த ஜிம் மல்ட்டி வெர்சிட்டி, இயக்குனர் கமலேஷ் றாவல், உள்ளிட்டோர் பேசினர். தொடர்ந்து கன்னட மொழியில் முதன் முதலாக வெளியிடப்பட்ட சமல் காரா சேதனா பிந்துக்கார். என்னும் நூல் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சுஜித் ஆசான், மனுவேல் ஆசான், சாம்ராஜ் வைத்தியர் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். அப்பு வைத்தியர் நன்றி கூறினார்.

# கேரளாவுக்கு கடத்திய 1000 லிட்டர் மண்ணெண்ணெய் : பறிமுதல் செய்த அதிகாரிகள்



புதுக்கடை, ஜன.9-

விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலர் அனிதா தலைமையில் தனி வருவாய் ஆய்வாளர் உள்ளிட்டோர் நட்டாலம் பகுதியில் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது வேகமாக வந்த கேரளா பதிவெண் கொண்ட வாகனத்தை சைகை காட்டிய போது வாகனம் நிறுத்தாமல் சென்றது. இதையடுத்து வாகனத்தை துரத்தி சென்று கல்லுக்கூட்டம் பகுதியில் வைத்து மடக்கிப்பிடித்து சோதனை செய்தபோது அதில் சுமார் 1000லிட்டர் படகுகளுக்கு வழங்கும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு மண்ணெண்ணெய் கைப்பற்றப் பட்டது. வாகன ஓட்டுனர் தப்பிவிட்டார். தொடர்ந்து மண்ணெண்ணெய் இனயத்தில் உள்ள குடோனிலும், வாகனம் தாலுகா அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# புதுக்கடை அருகே இளம்பெண் மாயம் : போலீசில் பெற்றோர் புகார்

புதுக்கடை, ஜன.9-

புதுக்கடை அருகே பைங்குளம் பகுதியை சேர்ந்தவர் ததேயூஸ்- பிரேமா தம்பதியர் மகள் ஜீவிதா (27). இவர் மார்த்தாண்டத்தில் உள்ள ஒரு ஜவுளி கடையில் வேலை பார்த்து வந்தார். நேற்று காலை வழக்கம் போல் கடைக்கு வேலைக்கு சென்றுள்ளார். பின்னர் விசாரித்ததில் அவர் கடைக்கு வேலைக்கு செல்லவில்லை என கூறப்படுகிறது. உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடியும் ஜீவிதா குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதையடுத்து தாயார் பிரேமா (52) என்பவர் நேற்று புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான இளம் பெண் குறித்து விசாரித்து வருகின்றனர்.



தூத்துக்குடி மாவட்டம் டூவிபுரம் நியாய விலைக் கடையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ அரிசி ஒரு கிலோ சர்க்கரை ஒரு முழுக்கரும்பு ஆகிய பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3000/– ம் ரொக்கம் மற்றும் வேட்டி சேலை வழங்கினார் உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிச்சந்திரன் , ஜீவன் ஜேக்கப், கூட்டுறவு சங்கம் துணைக் பதிவாளர் கலையரசி, கூட்டுறவு வங்கி நிர்வாக இயக்குனர் காந்திமதி நகர்,வட்ட வழங்கல் தாசில்தார் ஞானராஜ், கவுன்சில் ராமர், பேச்சிமுத்து , அற்புதராஜ் ரவீந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அதிகாரிகள், பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்

# ராமநாதபுரம் கிழக்கு மாவட்ட தமுமுக மமக நிர்வாக குழு கூட்டம் மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ஜிப்ரி தலைமையில் நடைபெற்றது



ராமநாதபுரம், ஜன.9-

ராமநாதபுரம் கிழக்கு மாவட்ட தமுமுக மமக நிர்வாககுழு கூட்டம் மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஜிஃப்ரி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தை ஐபிபி செயலாளர் நவ்பிக் இறைவசனம் ஓதி துவக்கி வைத்தார்.

கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட பொறுப்பாளரும் தமுமுக மாநில செயலாளருமான தொண்டி சாதிக் பாட்ஷா, தமுமுக தலைமை பிரதிநிதி மண்டலம் ஜெயனுலாபுதீன், புருனை மண்டல முன்னாள் தலைவர் நூருல் அமீன் ஆகியோர் கலந்து கொண்டு தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் கடந்த கால நிகழ்வுகள் பற்றியும் எதிர்கால திட்டங்கள் பற்றியும் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்தில் மாவட்ட செயல் திட்டங்கள் தொடர்பாக பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டது. இறுதியாக புதிய மாவட்ட அலுவலகம் திறப்பது, மாவட்டம் முழுவதும் சுற்றுபயணம் செய்து இருக்கும் கிளைகளை வலுப்படுத்துவது மற்றும் புதிய கிளைகளை உருவாக்குவது, உறுப்பினர் சேர்க்கை முகாம் நடத்துவது, விடுபட்ட நிர்வாக பொறுப்புகளை பூர்த்தி செய்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் தமுமுக மாவட்ட செயலாளர் பொறியாளர் யி.ஜாவித் அஸ்ஸாம், மமக மாவட்ட செயலாளர் தேவிபட்டிணம் ஜாஹிர், தமுமுக மமக மாவட்ட பொருளாளர் பனைக்குளம் அஹமது ஹசன், மாவட்ட துணை தலைவர் நம்புதாளை சாஹூல் ஹமீது, தமுமுக மாவட்ட துணை செயலாளர் தேவிபட்டிணம் ராவுத்தர், மமக துணை செயலாளர் தொண்டி கவுன்சிலர் பெரியசாமி, மாவட்ட விவசாய அணி செயலாளர் ஆனந்தூர் உபைதுல்லா, எஸ்எம்ஐ முன்னாள் மண்டல செயலாளர் பனைக்குளம் பஹத், மாவட்ட மீனவர் அணி செயலாளர் தேவிபட்டிணம் புஹாரி, மாவட்ட மீனவர் அணி பொருளாளர் தொண்டி பெரியசாமி, மாவட்ட மருத்துவ அணி செயலாளர் புதுவலசை அப்சர், எஸ்எம்ஐ மாவட்ட செயலாளர் பனைக்குளம் யாசிர், திருவாடானை ஒன்றிய பொறுப்பாளர் மங்களக்குடி கைய்யும், புதுவலசை முஹம்மது மகாதீர், ஜலில் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். பெண்களை தலைமைப் பண்புடன் ஆளுமை மிக்கவர்களாக உருவாக்க தமிழக அரசு உள்ளாட்சிகளில் பெண்களுக்கான சமூக நீதிக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடிய உள்ளாட்சி பொறுப்புகளில் பெண்களுக்கு தமிழக அரசு அதிக ஒதுக்கீடு செய்து அதை நடைமுறைப்படுத்தி அழகு பார்த்து வருகிறது இந்த அரசின் கொள்கை முடிவுகளுக்கு எதிராக தொண்டி பேரூராட்சியில் ஒரு பெண் தலைவராக வந்த தன் தாயை செயல்பட விடாமல் தடுத்து தலைவரின் மகன் தொடர்ந்து பேரூராட்சி நிர்வாகத்தில் தலையிட்டு குழப்பம் விளைவித்து வரும் செயல் திமுக அரசுக்கு பெரும் களங்கம் விளைவிக்கும் விதமாக நடந்து கொள்ளும் பேரூராட்சி மன்ற தலைவியின் மகன் நிர்வாக தலையிட்டு நிறுத்த கோரியும் அதற்கு உடந்தையாக இருக்கும் செயல் அலுவலர் அவர்களை பணியிட மாற்றம் செய்ய கூறியும் தமிழக அரசுக்கும் உள்ளாட்சி நிர்வாகத்திற்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் கோரிக்கை வைக்கின்றோம் .தொண்டியில் நீண்ட கால கோரிக்கையான தொண்டி அரசு மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி பொது மருத்துவமனையாக தமிழக அரசு அறிவிக்க வேண்டும் தொண்டியில் அரசு போக்குவரத்து பணிமனை அமைக்க வேண்டும் தொண்டி பழைய பஸ் நிலையம் அருகே கடற்கரை சாலை மதுரை சாலை சந்திப்பில் ரவுண்டானா கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் பொறியாளர் ஜாவித் அசாம் நன்றி கூறினார்.

# கோதையாற்றில் முதலை நடமாட்டம் : ட்ரோன் மூலம் வனத்துறையினர் இரவு பகலாக தீவிர தேடுதல் வேட்டை



மார்த்தாண்டம், ஜன.9 -

திற்பரப்பு, கோதையாற்றில் களியல் பகுதியில் முதலை நடமாட்டம் இருப்பதாக வீடியோக்கள் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகின்றன. கடந்த சில தினங்கள் முன்பு முதலை குட்டியின் வீடியோ வெளியானது. இதையடுத்து கடந்த 3 தினங்களில் மீண்டும் 2 வீடியோக்கள் என தற்போது வரையிலும் அப்பகுதி மக்களால் மூன்று வீடியோக்கள் எடுக்கப்பட்டு அந்த வீடியோக்கள் சமூக வலைதளத்தில் வெளியிடப்பட்டது. அதுபோல களியல் வனத்துறையினருக்கும் இந்த வீடியோக்கள் பகிரப்பட்டது.

இதையடுத்து கோதையாற்றில் முதலை நடமாட்டம் இருப்பதாக வனத்துறையினரும் உறுதி செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து இரவு பகலாக முதலை நடமாட்டம் இருக்கிறதா ?என்பதை உறுதி செய்ய டிரோன் மூலம் வனத்துறையினரும் கண்காணித்து வருகின்றனர். குறிப்பாக சம்பந்தப்பட்ட முதலை பதுங்கியதாக கூறப்பட்ட உறை கிணறு அமைந்துள்ள பகுதியில் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் வனத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக ஆற்றின் இரு கரைகளிலும் தலா ஒருவர் வீதம் முதலை வருகிறதா? அது எந்த பகுதியில் பதுங்கி உள்ளது? என்பதை கண்காணித்து வருகின்றனர். இதற்காக கேமராக்களும் படுத்தப்பட்டுள்ளன. மேலும் இரவிலும் வனவிலங்கு நடமாட்டத்தை கண்காணித்து புகைப்படங்கள் எடுக்கும் தெர்மல் இமேஜ் டிரான் மூலமும் கண்காணிக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று காலையில் மீண்டும் வனத்துறையினர் உறை கிணறு அமைந்துள்ள பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இது குறித்து வனத்துறையினர் கூறுகையில், - தற்போது வரை முதலை தென்படவில்லை. அவை ஆற்றின் இரு புறங்களிலும் உள்ள செடி கொடிகளுக்குள் மறைந்திருக்கலாம். நேரம் செல்ல செல்ல வெயில் வந்ததும் செடி கொடிகளில் இருந்து வெளியே வர வாய்ப்புள்ளது. ஆனால் கண்காணிப்பு பணியை தொடர்ந்து வருகிறோம். முதலை தென்பட்ட பின் தமிழ்நாடு முதன்மை வன பாதுகாவல் துறை அனுமதி பெற்று, தீயணைப்புத்துறை உள்ளிட்ட இதர துறை உதவியுடன் முதலை பிடிக்கப்படும் என்று கூறினார்கள்.

முதலை நடமாட்டம் பகுதியாக கூறப்படும் பகுதியில் கடையால் பேரூராட்சிக்கு சொந்தமான சுற்றுலா படகு துறையும், அதன் கீழ் பகுதியில் ஏராளமான மக்கள் வரும் சுற்றுலா பகுதியான திற்பரப்பு அருவி பகுதியும் உள்ளது. தற்போது இந்த காட்சிகள் சமூகவலைதளங்களில் வைரலாகி வருவதால் இங்கு வரும் சுற்றுலா பயணிகளும் அச்சமடைந்துள்ளனர்.

# இறகுப்பந்து போட்டி : அல்அமீன் அணிக்கு பாராட்டு



தொண்டி,ஜன.9-
ராமநாதபுரம் மாவட்டம், தொண்டியைச் சேர்ந்த விளையாட்டு வீரர் அல் அமீன் அணியினர், காரைக்குடி அழகப்பா பல் கலைக்கழகத்தில் பயின்று ஆந்திராவின் விஜயவாடாவில் தென் மண்டல அளவி லான இறகு பந்து போட்டியில் கலந்து கொண்டனர்.

ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநில அணிகளுடன் விளையாடி கால் இறுதிச் சுற்று வரை முன்னேறி சிறப்பாக விளை யாடியதால், அழகப்பா பல்கலைக்கழக இறகுப்பந்து அணியின் வெற்றி குறித்து, திருவாடானை தாசில்தார் ஆண்டி கல்லூரி மாணவர் அல் அமீனை வெகுவாக பாரா ட்டினார். எஸ்.பி.பட்டிணம் காவல் ஆய் வாளர், சுரேஷ், உடன் வளைகுடா வாழ் தமிழர்கள் நலச்சங்க நிறுவனத் தலைவர், நம்புதாளை பாரிஸ், மாநில நிர்வாகிகள் வாசு ஜெயந்தன், முகமது ஜியாத், அசா ருதீன், ராவுத்தர், உதயம் இப்ராஹிம் ஆகி யோர் உடன் இருந்தனர்.

# சேலத்தில் அதிமுக ஐடி விங் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



சேலம் ஜனவரி 09-
சேலம் புறநகர் மாவட்டச் செயலாளர் ஆர். இளங்கோவன் ஆலோசனைப்படி புறநகர் மாவட்ட அதிமுக தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் ஜெயகாந்தன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2026 தேர்த லில் தகவல் தொழில் நுட்ப பிரிவின் செய ல்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் வெற்றியை எவ்வாறு கையாள்வது என்று பல்வேறு வகையான ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இதில் நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய பேரூர் , நகர கழக பொறுப்பாளர் கள் கலந்து கொண்டனர்.

# கௌமார மடாலய சுவாமிகளின் 69-வது ஆண்டு குருபூஜை விழா-முப்பெரும் விழா



கோவை, ஜன.09-
135 ஆண்டுகள் பழம் பெருமை வாய் ந்த கோவை கௌமார மடாலயத்தை நிறுவிய திருப்பெருந்திரு. இராமானந்த சுவாமிகளின் 69-வது ஆண்டு குருபூஜை விழா,தண்டபாணி சுவாமிகளின் நூல் கள் வெளியீட்டு விழா,கல்வி,இசை,சமூக சேவைகளில் சாதனை படைத்தவர்களுக்கு விருது வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா கோவை சின்னவேடம்பட்டி கௌமார மடாலய வளாகத்தில் உள்ள குமரகுரு பர கடவுள் கலையரங்கில் நடைபெற்றது விழாவுக்கு திருப்பெருந்திரு. இராமானந்த குமரகுருபர சுவாமிகள் தலைமை தாங்கி னார்.முன்னாள் கல்லூரி கல்வி இயக்குனர் டாக்டர் குமாரசாமி வரவேற்று பேசினார்.

விழாவில் தண்டபாணி சுவாமிகளின் நூல்களை பேரூராதீனம் தவத்திரு. சாந்த லிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம் மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள். பழனி ஆதீனம் சாது சண்முக அடிகளார், தாராபுரம் வரன்பாளையம் திருநாவுக்கரசு திருமடம் மௌன சிவாச்சல அடிகளார், தென்சேரிமலை ஆதீனம் முத்து சிவரா மசாமி அடிகளார், காமாட்சிபுரி ஆதீனம் சாக்தஸ்ரீ பஞ்சலிங்கேஸ்வர சுவாமிகள் ஆகியோர் வெளியிட்டனர். அதை தொட ர்ந்து கல்வி, இசை, சமூக சேவையில் சாதனை படைத்த அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் பாலகுருசாமி,அவினாசிலிங்கம் பல்கலை க்கழக வேந்தர் குழந்தைவேல்,ஐ.நா. சபை சிறப்பு தூதர் ராஜா பி.ஆறுமுகம், மலேசிய நாட்டை சேர்ந்த டாக்டர் ஜெயபாலன் வள் ளியப்பன், லண்டனை சேர்ந்த சிவ.தம்பு, சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த கணேஷ் குமார், வடவள்ளி திருப்புகழ் குழுவை சேர்ந்த வைத்தியநாதன், மற்றும் கௌமார மடாலயத்தை சேர்ந்த தவில்-நாதஸ்வர கலைஞர்களான கனகராஜ், கோவிந்தராஜ், மாணிக்கராஜ். கணேசன் ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டது.விழாவில் திருப்பெ ருந்திரு. இராமானந்த குமரகுருபர சுவாமி கள் பேசுகையில்,135 ஆண்டுகளுக்கு முன் இராமானந்த சுவாமிகளால் தொடங்கப்பட்ட இந்த கௌமார மடாலயம் கொல்லாமை, புலால் உண்ணாமை, இறையன்பு, அற வொழுக்கம் ஆகிய நெறிகளை உலகம் முழுவதும் பரவச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் செயல்பட்டு வரு கிறது என்றார்.

விழாவில் பிள்ளையப்பன்பாளையம் செல்வ நாயகி அம்மன் கோவில் தலைவர் செல்லப்பன்,தமிழக விவசாயிகள் சங்க தலைவர் ஆறுச்சாமி,குப்பனூர் பெருங்க ருணை மாரியம்மன் கோவில்,பரம்பரை அறங்காவலர் சதாசிவம்,மாநில முருக பக்தர்கள் பேரவை செயலாளர் இராமமூர் த்தி,மரகதம் அம்மையார், கௌமார மடா லய நிர்வாகி இராமானந்தம் மற்றும் திரு மடத்தின் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் திருப்பெருந்திரு. இராமானந்த சுவாமிகள் திருவுருவ சிலை வைக்கப்ப ட்டு10-க்கும் மேற்பட்ட கோவில்களுக்கு கொண்டு செல்லப்பட்டது.இந்த நிகழ்ச் சிகளில் நூற்றுக்கணக்கான பக்தர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு சூரியம் பாளையம் பகுதி திமுக சார்பில் ஏறி பந்து போட்டி 10 அணிகள் பங்கேற்பு



ஈரோடு ஜன.9-
பொங்கல் பண்டிகையை திராவிட பொங்கல் மற்றும் சமூக நீதிக்கான திருவி ழாவாக நடத்த முதலமைச்சர் மு க ஸ்டா லின் உத்தரவிட்டு உள்ளார் .

அதன்படி ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை யொட்டி பல்வேறு விளையாட்டு போட்டிகள் நட த்தப்படும் என்று அமைச்சர் முத்துசாமி அறிவித்து உள்ளார். இதன் படி வருகிறது ஈரோடு சூரியம்பாளையம் பகுதி திமுக சார்பில் நந்தா இன்ஜினியரிங் கல்லூரி வளாகத்தில் உள்ள மைதானத்தில் ஆண் மற்றும் பெண்களுக்கான எறிபந்து போட்டி சூரியம் பாளையம் பகுதி செயலாளர் குமார வடிவேலு தலைமையில் நடந்தது. பகுதி செயலாளர்கள் அக்னி சந்துரு குறிஞ்சி தண்டபாணி முருகேசன் மண்டல தலைவர் சசிகுமார் ஆகியோர் போட்டியை தொடங்கி வைத்தனர்.

இதில் கல்லூரிகள் அரசுப்பள்ளி பொது கிளப்பை சேர்ந்த 10 அணிகளை சேர்ந்த 120 வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டு விளையாடினர்.

இந்த நிகழ்ச்சியில் மாநகர விளையாட்டு அணி அமைப்பாளர் மகேந்திரன் வீரசாமி மற்றும் தி மு க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா வருகிற 10 ந் தேதி நடக் கிறது. இதில் அமைச்சர் முத்துசாமி கலந்து கொண்டு பரிசுகள் வழங்குகிறார்.




# அரூர் வட்டாரக் கால்நடை மருத்துவமனையில் பாலார் வேளாண் கல்லூரி RAWE மாணவர்கள் பங்கேற்பு!




தருமபுரி, ஜன.09–
தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் அமைந்துள்ள சித்தேரி கிராமக் கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவமனையில், பாலார் வேளாண் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாகப் பங்கேற்றனர்.
இந்நிகழ்வின் போது, கால்நடை மருத்துவர் டாக்டர் சௌமியா அவர்கள், விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் மாட்டினங் களில் செயற்கை கருவூட்டல் (Artificial Insemination) முறை கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். மாடுகளின் இன மேம்பாடு, பால் உற்பத்தி அதிகரிப்பு, நோய் பரவல் கட்டுப்பாடு மற்றும் செயற்கை கருவூட்டலின் பயன்கள் குறித்து விரிவாக விளக்கம் அளித்தார்.
மேலும், செயற்கை கருவூட்டல் செய்யும் நடைமுறை, சரியான நேரத் தேர்வு, கருவூட்டலுக்குப் பிந்தைய பராமரிப்பு முறைகள் ஆகியவை குறித்த நேரடி செயல்முறை விளக்கமும் வழங்கப் பட்டது. இந்நிகழ்ச்சி மூலம் விவசாயிகள் பயனடைந்ததுடன், மாணவர்கள் சிறந்த கள அனுபவத்தைப் பெற்றனர்.

# புதுக்கடை அருகே பைக்குகள் நேருக்கு நேர் மோதல் : 2 பேர் காயம்

புதுக்கடை, ஜன.9–
புதுக்கடை அருகே முஞ்சிறை பகுதியை சேர்ந்தவர் விமல்ராஜ் (39). வெல்டிங் தொழிலாளி. இவர் சம்பவ தினம் இரவு 8 மணி அளவில் தனது 10 வயது மகன் லிசோஸ் என்பவருடன் முஞ் சிறை சந்திப்பதில் உள்ள ஹோட்டலில் உணவு வாங்கி விட்டு இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். அப்போது குழித்துறை – தேங்காப்பட்டணம் சாலையில் செல் லும்போது, எதிரே அதே பகுதியை சேர்ந்த கிரிஷ்குமார் மகன் விஷ்ணு (23) என்பவர் அஜாக்கிரதையாக வேகமாக ஓட்டி வந்த மற்றொரு பைக் விமல் ராஜ் பைக்கில் மோதியது. இதில் விம ல்ராஜ் தூக்கி வீசப்பட்டு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவரை திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக மதிக்கப்பட்டடார். விபத்துக்கு காரணமான விஷ்ணுவும் காயமடைந்தார். அவரும் நித்திரவிளையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். இது குறித்த இது குறித்து விமல்ராஜ் மனைவி அனுஷா (36) என்பவர் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குமுதேப்பள்ளியில் நாளை நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்!



கிருஷ்ணகிரி, ஜன.09-
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஓசூர் வட்டம், குமுதேபள்ளி மித்ராலயா பள்ளி வளாகத்தில் 10.01.2026 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெற உள்ளது.

இம்மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு தேவை யான இரத்த பரிசோதனை, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை, க்ஸ்.ரே, இசிஜி, அல்ட்ரா சவு ண்ட், கண் பரிசோதனை மற்றும் மகப்பேறு மருத்துவம் போன்ற 17 வகையான சிறப்பு நிபுணர்களைக் கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், இம்முகாமுக்கு வரும் பொதுமக்களுக்கு முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டை வழங்கப்படு கிறது. மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தொழிலாள ர்களுக்கும் இலவசமாக அடையாள அட்டை வழங்கப் படுகிறது. அனைத்து பொதுமக்களுக்கும் இலவசமாக உடல் பரிசோதனைகள் மற்றும் இருதய பரிசோதனை செய்யப்படுகிறது.

இம்முகாமில் தொற்றா நோய், உயர் இரத்த அழு த்தம், கண் பார்வை பரிசோதனை, சிறுநீரக பரிசோ தனை, இதய பரிசோதனை மற்றும் நரம்பியல் மருத் துவம், சித்த மருத்துவம், பெண்களுக்கான மார்பக புற்றுநோய் பரிசோதனை மேலும் பல் சிகிச்சை உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளதால் அனைத்து பொதும க்களும் கலந்துக்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

# புதுக்கடை அருகே பைக் விபத்தில் அரசு பஸ் டிரைவர் காயம்!

புதுக்கடை, ஜன.9-
நித்திரவிளை அருகே காஞ்சாம்புறம் பகுதியை சேர்ந்தவர் விஜயகுமார் மகன் ஆனந்து (25). இவர் அரசு பஸ்ஸில் சி எல் ஆர் டிரைவராக தற்போது பணிபுரிந்து வருகிறார்.

நேற்று முன்தினம் இவர் கருங்கல் - புதுக்கடை சாலையில் பைக்கில் வந்து கொண்டிருந்தார். வேங் கோடு, பனவிளை பகுதியில் வரும்போது எதிரே வந்த சரக்கு வாகனம் ஒன்று அனந்துவின் பைக் மீது மோதி யது. இதில் அனந்து தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடை ந்தார். உடனடியாக அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு கஞ்சிரகோடு பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இது குறித்த புகாரின் பேரில் விபத்தை ஏற்படுத்திய சரக்கு வாகன டிரைவர் ஸ்தேவான் ஐசக் என்பவர் மீது புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

# என்னைப்போன்ற ஏழை மாணவர்களுக்கு முதல்வர் வழங்கிய மடிக்கணினி வரப்பிரசாதம்!

## தென்காசியை சேர்ந்த விவசாயி மகன் நெகிழ்ச்சி!!



தென்காசி, ஜன.09-
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் உல கம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணி வழங்கியதைத் தொடர்ந்து, தென்காசி மாவ ட்டம் சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் முதற்கட்டமாக 604 கல்லூரி மாணவ, மாணவி யர்களுக்கு மடிக்கணிணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர் இ.ஆ.ப., அவர்கள், வழங்கினார்.

தென்காசி மாவட்டம், சுரண்டை காம ராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல் லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் மாவ ட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் அவ ர்கள், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பழனி நாடார் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு முதற்கட்டமாக 604 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணி ணியை வழங்கினார்கள்.

தென்காசி மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைச் சேர்ந்த 3503 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணி வழங்கப்படவுள்ளது. அத னடிப்படையில் முதற்கட்டமாக இன்றைய தினம் 604 கல்லூரி மாணவ, மாணவியர்க ளுக்கு மடிக்கணிணி வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கி ஷோர்.இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவ லர் திரு.சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்ட பாணி, மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி. மதிவதனா, சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனை வர்.கணேசன், சுரண்டை நகர்மன்ற தலைவர் திரு.வள்ளிமுருகன் மற்றும் அரசு அலுவலர் கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உலகம் உங்கள் கையில் திட்டத்தின் வாயிலாக மடிக்கணினி பெற்ற திரு.அ.ஹரி தரன் மாணவன் தெரிவிக்கையில்,

எங்கள் குடும்பம் விவசாய குடும்பம். என் தகப்பனார் பெயர் அன்னராஜ். அவர் கள் ஒரு விவசாயி அதிலிருந்து வரும் வருமானத்தை வைத்து தான் எங்கள் குடும்பம் நடைபெற்று வருகிறது அந்த சூழ்நிலையிலும் என்னை காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் இளங் கலை மைக்ரோ பயாலஜி சேர்த்து தற்பொழுது மூன்றாம் ஆண்டு பயி ன்று வருகிறேன். எனக்கு இந்த மடிக்க ணினி கிடைத்துள்ளதால் படிப்பதற்கு உதவிகரமாக இருக்கும். மேலும், வேலை வாய்ப்பு உள்ள செய்திகளை சேகரிப்பதற்கு மிகவும் பயனுள்ள தாக இருக்கும். எங்களைப் போன்ற மாணவர்களுக்கு மடிக்கணினி வர ப்பிரசாதம். மடிக்கணினி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாவ ட்ட நிர்வாகத்திற்கும் எனது மனம் நிறைந்து நெஞ்சார்ந்த நன்றியை தெரி வித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தென்காசி**

# ஊத்தங்கரை அருகே யுனிக் கலை - அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் தொடக்க விழா!




கிருஷ்ணகிரி, ஜன.09-
கிருஷ்ணகிரி மாவட்டம் 5 ஊத்தங்கரை அடுத்த காரப் பட்டு அருகே யுனிக் கலை கல்லூரியில் நாட்டு நலப்ப க் ணித் திட்ட சிற ப்பு முகாம் சு நடைபெற்றது இந்நிகழ்வில் செல்வி வி.மித்ரா மருத்துவ ஆய்வக தொழி ல்நுட்ப மாணவி வரவேற்புரையாற் றினார். கல்லூரியின் முதல்வர் மற்றும் தாளாளர் முனைவர் க. அருள் தலைமை உரை யாற்றி சிறப்பு முகாமை துவக்கி வைத்தார் அதனைத் தொடர்ந்து மகனூர்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி யின் தலைமை ஆசி ரியர் சி.சீ னிவாசன் சிறப்புரையாற்றினார். மேலும் பள்ளியின் விளையாட்டு ஆசிரியர் ஓய்வு குப்புசாமி நாயகம் ஐயா சிறப்புரை யாற் றினார்.

இந்நிகழ்வில் சக்திவேல் சக்தி மெடி க்கல்ஸ் மகனூர் பட்டி, எம். ஆர்.சுரேஷ் தொழிலதிபர் மகனூர்பட்டி சக்திவேல் சமூக ஆர்வலர் மகனூர்பட்டி, அரசு மேல்நி லைப் பள்ளியின் உதவி தலைமை ஆசிரி யர் திருப் பதி மற்றும் யுனிக் கல்லூரி னார். இந்நிகழ்ச்சியில் இருபால் துறை தலை வர் கள் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இறுதியாக மோகன பிரியா தமிழ் துறை மாணவி நன்றியுரை ஆற்றினார்.

உதவி பேராசிரியர் சி.குறிஞ்சி மலர் தொகுத்து வழங்கினார். பிற்பகல் நிகழ்வு அரசு மேல்நிலைப் பள்ளி மகனூர்பட்டி பள்ளி வளாகத்தில் தூய்மை பணி நடை பெற்றது.

# சிவகிரியில் கனிமொழி எம்.பி., பிறந்தநாள் விழா




சிவகிரி, ஜன.9–
சிவகிரியில் தி.மு.க. துணை பொதுச்செயலா ளரும், நாடாளுமன்ற குழு தலைவருமான கவி ஞர் கனிமொழி எம்.பி.யின் 58 வது பிறந்தநாள் விழாவை யொட்டி திமுகவினர் பொதுமக்க ளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.
நிகழ்ச்சிக்கு திமுக மாநில மருத்துவ அணி துணைச்செயலாளர் டாக்டர் செண்பகவிநா யகம், வாசுதேவநல்லூர் யூனியன் சேர்மனும், வடக்கு ஒன்றிய திமுக செயலாளருமான பொன் முத்தையா பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி. சீனிவாசன் ஆகியோர் தலைமை தாங்கினர்.
வாசுதேவநல்லூர் தொகுதி பொறுப்பாளர், தென் காசி வடக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் மனோகரன், தென்காசி வடக்கு மாவட்ட மருத் துவ அணி தலைவர் டாக்டர் சுமதி, தென்காசி மாவட்ட அரசு வழக்கறிஞர் மருதப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிவகிரி பேரூர் பொறுப் பாளர் நல்லசிவன் அனைவரையும் வரவேற்றார்.
பிறந்த தின விழாவை முன்னிட்டு தி.மு.க. கொடி கம்பத்தில் கொடியேற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. சிவகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் நோயாளிகளுக்கு பிஸ்கட் பிரட் பழங்கள் வழங் கப்பட்டது. சிவகிரி பஸ் நிலையம் முன்பாக, காந் திஜி கலையரங்கம் முன்பாக பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. முன்னாள் முதல்வர் கரு ணாநிதி திருவுருவ சிலைக்கு மாலை அணிவி த்து மரியாதை செலுத்தினர். தேவிபட்டணத்தில் சால்ட் தொண்டு நிறுவனம் சார்பாக இயங்கும் ஆதரவற்றோர் குழந்தைகள் இல்லத்தில் பிறந்த நாள் கேக் வெட்டி குழந்தைகளுக்கு வழங்கினர். தொடர்ந்து அறுசுவை உணவு வழங்கப்பட்டது.
நிகழ்ச்சியில் அரசு மருத்துவமனை டாக்டர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், தி.மு.க. நிர்வாகிகள் சி.எஸ்.மணி, விக்னேஷ் ராஜா, ராமச்சந்திரன், பாலகுரு, கார்த்திக், தங்கராஜ், முத்துலட்சுமி, விக்னேஷ், இளையராஜா, மதுரை வீரன், சாமுவேல், கங்காதரன், துரைராஜ், புல்லட் கணேசன், ரத்தினராஜ், தங்க தமிழ்ச்செல்வன், தங்கரத்தினம், பெரியாண்டவர் மற்றும் பலர் கல ந்து கொண்டனர்.
சால்ட் தொண்டு நிறுவன குழந்தைகள் இல்லம் நிர்வாகிகள் அருட் சகோதரிகள் புனித ராணி மேரி, குட்டி இளவரசி ஆகியோர் நன்றி கூறினர்.

# ஈரோடு மாவட்டத்தில் பொங்கல் தொகுப்பு - ரொக்கம் ரூ 3 ஆயிரம் : அமைச்சர் முத்துசாமி தொடங்கி வைத்தார்



ஈரோடு, ஜன. 9-

பொங்கல் பண்டிகையை ஒட்டி அரிசி ரேஷன் கார்டுகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சென்னையில் பொங்கல் தொகுப்பு பரிசு மற்றும் ரொக்கம் ரூ 3 ஆயிரம் வழங்கி தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் உள்ள 7 1/2 லட்சம் அரிசி ரேஷன் கார்டுகளுக்கு அமைச்சர் சு. முத்துசாமி பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கி தொடங்கி வைத்தார்.

ஈரோடு மாணிக்கம் பாளையத்தில் உள்ள ரேஷன் கடையில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி தலைமையில் அமைச்சர் முத்துசாமி பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கம் ரூ 3 ஆயிரம் ஆகியவற்றை அமைச்சர் முத்துசாமி வழங்கினார். முன்னதாக கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் காந்த ராஜா வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் செல்வராஜ், மண்டல தலைவர் காட்டு சுப்பு மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அதிகாரிள் கலந்து கொண்டனர்.

இதன் பிறகு திண்டல். வேப்பம்பாளையம். நசியனூர் நஞ்சனாபுரம், ஆகிய பகுதிகளில் செயல்படும் கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் செயல்படும் நியாயவிலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரொக்கம் ரூ.3000 வழங்கி திட்டத்தினை அமைச்சர் முத்துசாமி துவக்கி வைத்தார்.

அப்போது அவர் கூறியதாவது

ஈரோடு மாவட்டத்தில் செயல்படும் 1,270 நியாயவிலைக் கடைகள் மூலம் பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகிக்கப்படவுள்ளது. இதற்காக ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.2 23.95,84,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஈரோடு மாவட்டத்தில் 7,45.155 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் 1.373 குடும்பத்தினர் பயன்பெறுவர்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆவூரில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் சிறப்பு தொகுப்பு : துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி துவக்கி வைத்தார்




திருவண்ணாமலை ஜன.9-

திருவண்ணாமலை அடுத்த ஆவூர் ஊராட்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3 ஆயிரம் ரொக்கப்பணம் மற்றும் பொங்கல் சிறப்பு தொகுப்பு வழங்கும் விழா நேற்று நடந்தது. இந்த விழாவுக்கு முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஆரஞ்சி ஏ.எஸ்.ஆறுமுகம் தலைமை தாங்கினார். பொது விநியோக திட்ட செயல் ஆட்சியர் சரவணன் முன்னிலை வகித்தார். ஆவூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜப்பார் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, 864 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3 ஆயிரம் ரொக்கப்பணம் மற்றும் பொங்கல் சிறப்பு தொகுப்பினை வழங்கும் பணியை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு சார் பதிவாளர் தமிழ்செல்வி, கீழ்பென்னாத்தூர் ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், மற்றும் கூட்டுறவு துறை சார்ந்த அலுவலர்கள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் திமுக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

முடிவில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் பி.விஜயவேலன் நன்றி கூறினார்



**மதுரை மாவட்டம், சோழவந்தான் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் கிராமத்தில் உள்ள நியாய விலைக்கடையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட மத்திய கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சதிஸ்குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.**

# குமரியை சேர்ந்த பெண்ணுக்கு வரதட்சனை கொடுமை மதுரையை சேர்ந்த கணவர் உட்பட 4 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜன.9 -

திருவட்டாறு அருகே காங்கரை பகுதியை சேர்ந்தவர் பகவதி மகள் உத்தரசுந்தரி (30). இவருக்கும் மதுரை மாவட்டம் உச்சபரமேடு என்ற இடத்தை சேர்ந்த அசோக் பாண்டியன் மகன் ஹரிசங்கர் (32) என்பவருக்கும் கடந்த 2023 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. ஹரிசங்கர் பெங்களூருவில் உள்ள ஐடி கம்பெனியில் ஊழியராக வேலை பார்த்து வருகிறார். அவர் தந்தை அசோக் பாண்டியன் (65) ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

திருமணத்தின் போது உத்தரசுந்தரிக்கு வரதட்சணையாக 40 பவுன் நகை, ரூ. 5 லட்சம் ரொக்கம் மற்றும் ரூ. 2 லட்சம் மதிப்பில் வீட்டு உபயோக பொருட்கள் கொடுத்ததாக தெரிகிறது. திருமணம் முடிந்த சில நாளிலேயே கணவர் ஹரிசங்கர், மாமனார் அசோக் பாண்டியன், மாமியார் சுப்புலட்சுமி, கணவரின் அண்ணன் விஷ்வா கணேஷ் ஆகியோர் உத்தரசுந்தரிடம் கூடுதல் வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தியதாக கூறப்படுகிறது. மேலும் மாமனார் அசோக் பாண்டியன் உத்தரசுந்தரியின் பெற்றோருக்கு போன் செய்து வரதட்சணை கேட்டு மிரட்டி உள்ளார்.

இதை அடுத்து சில நாட்களில் உத்தரசுந்தரியின் நகைகளை கணவர் அடகு வைத்து செலவழித்து வந்ததாகவும், மேலும் ரூ. 10 லட்சம் வரதட்சணை வேண்டும் என கேட்டு கணவர் வீட்டிலிருந்து உத்தரசுந்தரியை துரத்திவிட்டார் என கூறப்படுகிறது.

இதனால் மன வேதனை அடைந்த உத்தரசுந்தரி வரதட்சனை குறித்து பத்மநாபபுரம் கோர்ட்டில் புகார் மனு அளித்தார். புகாரை விசாரித்த நீதிமன்றம் மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது. இதயடுத்து மார்த்தாண்டம் அனைத்து மகளிர் போலீசார் பெண்ணிடம் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக ஹரிசங்கர் உட்பட 4 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




# நாகர்கோவில் தலைமை நீதிமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் குமரியில் தொடரும் மிரட்டல்கள்



நாகர்கோவில், ஜன.9-

நாகர்கோவிலில் மாவட்டத்தின் தலைமை நீதிமன்றம் உள்ளது. நீதிமன்றத்திற்கு நேற்று முன்தினம் இரவு மெயில் ஒன்று வந்துள்ளது. அதனை நேற்று பார்த்த போது, நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாகவும், நேற்று மதியம் 1 மணியளவில் வெடிகுண்டு வெடிக்கும் எனவும் மர்ம நபர் மிரட்டல் விடுத்திருந்தார். அதனை தொடர்ந்து உடனடி தலைமை நீதிபதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது..

உடனடியான மாவட்ட எஸ்பி ஸ்டாலின் உத்தரவின் பேரில் கோட்டாறு போலீசார் மற்றும் மாவட்ட வெடிகுண்டு தடுப்பு நடவடிக்கை போலீசார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள், மோப்பநாய், மெட்டல் டிடெக்டர் கருவிகள் கொண்டு வந்து, நீதிமன்றத்தில் இருந்து அனைவரையும் வெளியேற்றினர். தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரமாக சோதனையில் ஈடுபட்டனர். ஆனால் சோதனையில் எந்தவிதமான வெடிகுண்டு இருப்பது தெரியவரவில்லை. வேறு எந்த மர்ம பொருட்களும் சிக்காத நிலையில் வெடி குண்டு மிரட்டல் விடுத்தது போலி என்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து நீதிமன்றத்தில் கூடி இருந்த வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கு அதிகமாக வந்த பொதுமக்கள் நிம்மதி அடைந்தனர்.

குமரியில் தொடர் வெடிகுண்டு மிரட்டல் சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. இது பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக பல்வேறு அரசு கட்டிடங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் மெயில் மூலமாக விடுத்து வருவது தொடர்கதை ஆகியுள்ளது. கடந்த மாதம் தமிழக முதல்வர் இல்லத்திற்கு பூதப்பாண்டி பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தார். அதேபோன்று நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கும் வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டிருந்தது குறிப்பிடத் தகுந்ததாகும்.

# கன்னியாகுமரி படகுகள் அணையும் பகுதியில் மணற் திட்டுகள் அகற்றும் பணி தீவிரம்



கன்னியாகுமரி, ஜன.9-

கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்து உள்ள பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அதன் அருகில் உள்ள மற்றொரு பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையும் எழுப்பப்பட்டு உள்ளது.

இவற்றை தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் படகில் சென்று பார்த்து வருகிறார்கள். இவற்றை பார்வையிட செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக தமிழக அரசு நிறுவனமான பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் சார்பில் பொதிகை, குகன், விவேகானந்தா ஆகிய 3 படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர கன்னியா குமரியில் இருந்து வட்டக் கோட்டைக்கு கடலில் உல்லாச பயணம் செய்வ

தற்காக திருவள்ளுவர், தாமிரபரணி ஆகிய 2 அதிநவீன சொகுசு படகு களும் உள்ளன. இந்த 5 படகுகளும் கன்னியாகுமரியில் உள்ள பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகுத்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

நீர்மட்டம் தாழ்வாகி கடல் உள்வாங்கும் போது இந்த படகுகள் தரை தட்டி நிற்கின்றன. படகுத்துறை யில் குவிந்து கிடக்கும் மணல் குவியல்களை அவ்வப்போது அகற்றாத தன் காரணமாக இந்த படகுகள் கடல் நீர்மட்டம் தாழ்ந்து உள்வாங்கும் போது தரை தட்டி நிற்பதாக கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து படகு துறையில் குவிந்து கிடக்கும் மணல் குவியல்களை அகற்ற பூம்புகார் கப்பல் போக்கு வரத்து கழகம் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது. கன்னியாகுமரி பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகு துறையில் தூர்வாரும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மணல் குவியல்களை ராட்சத பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# அதிமுக அடிமையா? கொதிக்கும் செல்லூர் ராஜூ

மதுரை, ஜன.09-

“அதிமுக அமித் ஷா சொல்வதை கேட்கிறது, அது பாஜகவுக்கு அடிமை என்று சொல்வது, உங்கள் கற்பனை. எங்கள் பொதுச்செயலாளர் பழனிசாமி, டெல்லிக்கு செல்வதால் நாங்கள் டெல்லிக்கு அடிமை கிடையாது” என்று முன்னாள் அதிமுக அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

# குலசேகரமங்கலத்தில் பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியை ராஜா எம்எல்ஏ துவக்கி வைத்தார் !



சங்கரன்கோவில். ஜன.9-

தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் பொதுமக்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையில் ரேஷன் கடைகள் மூலம் குடும்பஅட்டைதாரர்களுக்கு தலா, 3,000 ரூபாய் ரொக்கம் அடங்கிய,ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை, முழு கரும்பு அடங்கிய பரிசு தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலையும் வழங்கப்படும் என அறிவித்தார். இந்நிலையில் பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகத்தை சென்னை ஆலந்தூரில் நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்நிலையில் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம் குலசேகரமங்கலம் நியாய விலை கடையில் பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ துவக்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் வினு சக்கரவர்த்தி, வர்த்தக அணி அமைப்பாளர் மகேஷ், நிர்வாகிகள் ராஜேந்திரன், மணிகண்டன், சாமி,சார்லஸ், கோமதிராஜ், சீனிவாசன்,கவுன்சிலர் முத்துமாரி, ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளத்துரை, சேந்தமங்கலம் கிளைசெயலாளர் செல்வராஜ் ,ஜெயராஜ் மற்றும் பாலாஜி,பாரதிராஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# குப்பாண்டம்பாளையத்தில் பொங்கல் தொகுப்பு வழங்கல் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார் !



திருப்பூர், ஜன.09-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, ஆலந்தூர் பட்ரோடு நியாய விலைக்கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக்கருப்பு ஆகிய பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3,000/- ரொக்கம் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து,

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குப்பாண்டம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப்பணம், பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகளை வழங்கினார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன்

மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் தலைமையில், மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, குப்பாண்டம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப்பணம், பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகளை வழங்கினார்கள். மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தாவது, தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுடைய ஆதரவோடு 2021 ஆம் ஆண்டு மே திங்கள் 7-ம் நாள் முதலமைச்சராக பொறுப்பேற்றார்கள். அந்த காலகட்டம் என்பது ஒரு கொரோனா காலகட்டம் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாத ஒரு சூழ்நிலையில் நாம் தவித்துக் கொண்டிருந்தோம் எனவே அந்த கட்டத்திலே முதலமைச்சராக பொறுப்பேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கொரோனா காலக்கட்டத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.4,000 மும்,

14 வகையான மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்க உத்தரவிட்டார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், தாயுமானவர் திட்டம், அன்புக்கரங்கள் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை தமிழர்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் வருகின்ற 2026ம் ஆண்டு தைப்பொங்கலுக்கு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் ரூ.3000/- ரொக்கத்துடன் தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 முழுக்கரும்பு வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் இன்று சென்னையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி துவக்கி வைத்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் 8,02,201 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3000/- ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்படவுள்ளது. மேலும், கூட்டுறவுத்துறை மூலம் 848 முழுநேர நியாயவிலை கடைகளிலும் 348 பகுதி நேர நியாயவிலை கடைகளிலும் மொத்தம் 1196 நியாய விலைக் கடைகளிலும் இன்று 76,9580 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது. மகளிர் சுய உதவிகுழுக்கள் நடத்தும் 13 நியாய விலைக்கடைகள் மூலம் 20,860 குடும்ப அட்டைதாரர்களுக்கும், தமிழ்நாடு நுகர் பொருள்வாணிபக் கழகம் நடத்தும் 22 நியாய விலைக்கடைகள் மூலம் 11,439 குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கை தமிழர்மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் 322 குடும்ப அட்டைதாரர்கள் அடங்கும். திருப்பூர் மாவட்டத்திற்கு கூடுதலாக 8,02,201 குடும்ப அட்டைதாரர்களுக்கு 802 மெட்ரிக்டன் பச்சரிசியும், 802 மெட்ரிக்டன் சர்க்கரையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கரும்பு கொள்முதல்செய்திட ரூ.3.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 8,02,201 கரும்பு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ரொக்கம் ரூ.3000/- வழங்கிட ரூ.240.66 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் தாயுமானவர் திட்டம் மூலம் 65 வயதிற்கு மேற்பட்டுள்ள 71,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு டிசம்பர் 2025 மாதம் இல்லம் தேடி பொது வியோகத் திட்ட பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. .இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்கள். அந்த வகையில் இன்றயை தினம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் திருப்பூர் மாநகராட்சி, குப்பாண்டம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப்பணம், பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகளை வழங்கினார்கள். . இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் பிரபு, திருப்பூர் மாநகராட்சி 4-ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் திருமதி பிரபா, திருமதி தேவி உள்ளிட்ட கூட்டுறவு சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.